**தலைப்பு 130 – அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 130 – அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,072.96 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,887.18 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 185.78 மில்லியன் அதாவது 8.96 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,092.31 | 1,048.87 | 43.44 | 3.98 |
| மூலதனம் | 980.65 | 838.31 | 142.34 | 14.51 |
| மொத்தம் | **2,072.96** | **1,887.18** | **185.78** | **8.96** |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.02.01.01 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 700.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 727.33 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 103.90 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.02.01.01 | 700.00 | 727.33 | 27.33 | 3.90 |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50.00 | 29.95 | 25.00 | 25.53 | 200.00 | 86.31 |

### 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 06 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23.33 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0056/000 | 0.87 |
| 6000/0000/00/0002/0074/000 | 0.60 |
| 6000/0000/00/0013/0045/000 | 1.40 |
| 6000/0000/00/0016/0025/000 | 20.43 |
| 6000/0000/00/0018/0033/000 | 0.03 |
| மொத்தம் | **23.33** |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 70,085,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 12 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக அச்செலவின விடயங்களின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டில் 31 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) அமைச்சினால் பதவியணியினர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 24 மாவட்ட செயலகங்களுக்கு வழங்கிய ரூபா 5,107,672 ஆன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 785,028 தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அனுராபுரம் மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 372,000 ஆன மொத்த நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்திக்கான செலவினம் ரூபா 4,019,669 தொகை பதவியணியினர் பயிற்சி செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அச்செலவினம் வெளிநாட்டு பிரயாணச் செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது, பதவியணியினர் பயிற்சி செலவின விடயத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் சேமிப்புக்கள் ரூபா 1,683,410 ஆக இருந்தமையால் நிர்ணயிக்கப்பட்ட செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தால் செலவின விடயத்தின் நிதிஏற்பாடு போதியதாக இல்லையென அவதானிக்கப்பட்டது.

## 3.2 வருமானக் கணக்குகள்

அமைச்சு செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.02.01.01 ஆம் இலக்க வருமான குறியீட்டிற்குரித்தாக வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 216,564,613 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக இருந்தது வந்த போதிலும், அந்நிலுவை வருமானத்தை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையொன்றில் காணப்பட்டது.

(ஆ) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் 20.02.01.01 வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளவாறான வருமானக் குறைவு ரூபா 24.2 மில்லியனாக இருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,922,263 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 61 வீடுகளிலிருந்து நிலுவை வாடகை ரூபா 48,451,133 ஆக இருந்தது. XIX தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பிரிவு மற்றும் 7.2 பிரிவின் பிரகாரம் வாடகை மற்றும் தண்டபணம் ஆகியன உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

நிதிப் பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 18 சந்தர்ப்பங்களின் போது செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 3,247,147 தொகையான பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது.

## 3.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவு | - | 07 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீடுகளிலிருந்து தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.1 ஆம் பிரிவு | | 04 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்போர் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குடியிருந்த போதும் தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அவ்வாறு குடியிருப்போர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(4) | 1,705,386 | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த 05 நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 2007 ஏப்ரல் 20 ஆந் திகதிய 22/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் iv, v, vi மற்றும் vii ஆம் பந்திகள் | 3,262,337 | அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 62 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 வெளிநாட்டுச் செயற்திட்டம்

கஷ்டப் பிரதேசங்களின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான இயலளவு அபிவிருத்திக்காக UNDP செயற்திட்டத்தின் கீழ் ‘‘நல்லாட்சிக்கான பிராந்திய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டம்’’ அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக மானியமாக 29.015 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதில் 2.673 மில்லியன் அமெரிக்க டொலர்கள் UNDP செயற்திட்டத்தின் மூலமும், 26.342 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வேறு மானியமாக கிடைக்க வேண்டியிருந்த போதிலும், UNDP செயற்திட்டத்திலிருந்து மாத்திரம் நிதி கிடைக்கப்பெற்றிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்ற மானியங்களின் பெறுமதி 692,716 அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் காலம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 வரையாக இருந்தது. 2015 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 15,000,000 ஆக இருந்ததுடன், அச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,441,896 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், மூன்றாண்டு செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதமையால் செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பாக பரீட்சிக்க முடியவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் மொத்தக் கால எல்லை 53 மாதங்களாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 29 மாதங்கள் கடந்திருந்தன. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் காலஎல்லையில் 55 சதவீத காலம் கடந்திருந்த போதிலும், மொத்த நிதிஏற்பாடுகளில் 26 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படை தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் செயன்முன்னேற்றத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) 06 நாடளாவிய ரீதியான சேவைகள் உட்பட 13 சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் 102,412 ஆக இருந்ததுடன், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதில் 8,544 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், வருடாந்தம் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

அமைச்சிற்குரிய முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அமைச்சினால் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2011 | 1.4 | பொரள்ள கொட்டா வீதியில் அமைந்துள்ள 02 வீடுகள் சமய நிலையமொன்றாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், 1996 மே 23 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதனைப் பயன்படுத்தும் விஹாராதபதி அவர்களிடமிருந்து அமைச்சிற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியிலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை தொழில்நுட்ப சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் விஞ்ஞான சேவை ஆகிய சேவைகளின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் இணக்கப்பாடொன்று இல்லாமல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடமிருந்து அகற்றப்பட்டு 2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு முறைமைகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் செயற்படுத்தப்படாமை, தடைதாண்டல் பரீட்சை வருடத்திற்கு இரண்டு முறை நடாத்துவதற்கும் திணைக்களத்திற்கு ஒப்பாக அபேட்சகரால் கூடிய பணத்தொகையை அமைச்சிற்கு செலவிட நேர்தல் போன்ற விடயங்கள் காரணமாக இத்தீர்மானம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் 2 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றியிருந்த பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர், அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் 4 உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட கட்டணங்கள், உணவு பாணங்கள், பிரயாணச் செலவினம் மற்றும் பாடநெறிக் கட்டணங்கள் உட்பட அனைத்து செலவினங்களும் உரிய நிறுவகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 4(b)(i) ஆம் பந்திக்கு முரணாக இணைந்த படிகளாக ரூபா 1,549,511 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 69 | 62 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 11 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 534 | 452 | 82 |
| (iv) | ஆரம்ப நிலை | 179 | 156 | 23 |
| | **மொத்தம்** | **799** | **681** | **118** |